(Sugar year is from October to September) tripartite meetings of the representatives of the sugar mills, cane growers and the State Government were held and the mill owners were persuaded to pay a price higher than what the Government of India notified under the Sugarcane Control Order. For the year 1973–74, a similar tripartite meeting will be convened shortly for the same purpose. As the situation in the particular Mill mentioned by the hon. Member is now normal, I submit to the Hon. Speaker that there is no need to adjourn the business of the House.

திரு. என். கே. பழனிசாமி: ஒரு க்ளாரிபிகேஷன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தில் க்ளாரிபிகேஷன் கிடையாது.

(திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால் அட்டென்ஷன் நோட்டீசில்தான் கேள்வி கேட்கலாம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கிளாரிபிகேஷன் கிடையாது. அது முறையே இல்லை. கால் அட்டன்ஷன் நோட்டீசிலே தான் அப்படி கேட்கலாம்.

மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு பிறகு இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."
என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.